**ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்,**
**பிறப்பிப்பவர்: திரு.சி.கதிரவன், இ.ஆ.ப.,**

ந.க.எண். 13800 /2016 /ப2 நாள். 03.03.2020

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – ஈரோடு மண்டலம் – ஈரோடு மாவட்டம் – பேரூராட்சிகளில் கீழ்நிலைப் பணியாளர்களாக பணிபுரிந்த பணியாளர்களுக்கு அமைச்சுப்பணிகளில் 2014–2015ம் ஆண்டு வரை தேர்வு செய்யப்பட்ட வருடமாக கொண்டு ஏற்பட்ட காலிப்பணியிடத்திற்கு 20% ஒதுக்கீட்டின்கீழ் உரிய அரசாணையின்படி ஈரோடு மாவட்டத்தில் இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்ட 4 பணியாளர்களுக்கு பணி வரன்முறை செய்து உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:-
1. அரசாணை (நிலை) எண் 800 ஊரக வளர்ச்சித் துறை நாள் 6.12.1988
2. அரசாணை எண். 271 ஊரக வளர்ச்சித் துறை நாள் 04.04.1990
3. அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.08.1998.
4. அரசாணை (நிலை) எண். 10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 27.01.2014.
5. அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 12.09.2018.
6. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3493/202014/அ2 நாள் 25.09.2018.
7. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.13800/2016/ப2 நாள் 15.10.2018.
8. சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கருத்துருக்கள்
9. தொடர்புடைய ஆவணங்கள்

– – – –

<u>ஆணை</u>

ஈரோடு மாவட்ட பேரூராட்சிகளில் பணிபுரியும் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 1998–2008, 2009–2010 முதல் 2014–2015 ஆம் வரையிலான இளநிலை உதவியாளர்/வரித்தண்டலர் பதவியில் மொத்தம் கணக்கிடப்பட்ட காலிப் பணியிடங்களில், பேரூராட்சிகளில் பணிபுரியும் பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர், காவலர், துப்புரவு பணியாளர்கள் போன்ற கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 20 சதவிகிதம் ஒதுக்கீட்டின் அடிப்படையில் கீழ்க்கண்ட 4 (நான்கு) நபர்களுக்கு இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலர் பணியிடத்தில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணிமாறுதல் மூலம் நியமனம் செய்தும், இவ்வாறு பணியமர்த்தப்பட்டவர்களின் பணி மூப்பு (Seniority), அவர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணியமர்த்தப்பட்ட நாள் முதல் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி, ஈரோடு மாவட்டத்தில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்களாக பணிமாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் 4 பணியாளர்களது பணி வரன்முறை செய்து ஆணையிடப்பட வேண்டியுள்ளது.

மேலும் நான்கு பணியாளர்களது பணியினை வரன்முறை செய்யக்கோரி சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து பார்வை 8ல் காணும்படி முன்மொழிவுகள் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்காணும் செயல் அலுவலர்களின் அறிக்கையினை பரிசீலித்து கீழ்க்காணும் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்களை அரசாணையின்படி 20 சதவிகித ஒதுக்கீட்டில் நேரடி நியமனமாக பணியமர்த்தப்பட்டு ஆணையிடப்பட்டதால், தனியர்களை செயல் அலுவலர்களின் சான்றுகளின் அடிப்படையிலும், பரிந்துரையின் அடிப்படையிலும், தனியர்கள் பணியேற்பு செய்து கொண்ட நாளான கலம் 4ல் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் அவர்களின் பணியினை வரன்முறை செய்து (Service Regularisation) ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த பேரூராட்சி திரு/திருமதி | இளநிலை உதவியாளர் / வரிவசூலர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாள் | வரிவசூலர் நிலையில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | கே. ராமலிங்கம், குடிநீர் திட்ட காவலர், அந்தியூர் பேரூராட்சி. | வரித்தண்டலர் கூகலூர் பேரூராட்சி. | 29.10.2018 மு.ப., |
| 2 | ஆர். இராஜா, துப்புரவு பணியாளர், கொளப்பலூர் பேரூராட்சி. | வரித்தண்டலர் நம்பியூர் பேரூராட்சி. | 29.10.2018 மு.ப., |
| 3 | கே. நாகேந்திரன், பதிவுரு எழுத்தர், நம்பியூர் பேரூராட்சி. | இளநிலை உதவியாளர் பெரியகொடிவேரி பேரூராட்சி. | 26.10.2018 மு.ப. |
| 4 | வீ. நல்லசாமி, துப்புரவு பணியாளர், நசியனூர் பேரூராட்சி. | வரித்தண்டலர் கொளப்பளூர் பேரூராட்சி | 26.10.2018 மு.ப. |

மேற்காணும் பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

பெறுநர்
சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்/வரித்தண்டலர்கள்.
(பேரூராட்சி செயல் அலுவலர்கள் மூலம்)

நகல் : செயல் அலுவலர்கள், சம்பந்தப்பட்ட பேரூராட்சிகள், ஈரோடு மாவட்டம்,
நகல் : பணிப்பதிவேடு மற்றும் ப2 இருப்புக்கோப்பிற்கு.

செயல் அலுவலர்,
பெரியகொடிவேரி பேரூராட்சி
ஈரோடு மாவட்டம் - 638 503.